நாள்- 13.02.2024
Case No.OS.253/2014

DW.1- – விநாயகம்:–வாதி தரப்பு குறுக்கு விசாரணை:–

என்னுடைய அப்பா பெயர் சண்முகம், அம்மா பெயர் லட்சுமி. இருவரும் இறந்துவிட்டார்கள். என் அப்பா இறந்த தேதி ஞாபகம் இல்லை. என் அம்மா இறந்த தேதி ஞாபகம் இல்லை வருடம் 2003. என் தாத்தாவின் பெயர் பெரியசாமி, என் அம்மாவின் அப்பா பெயர் தங்கவேல். என்னுடைய பூர்வீகம் பூண்டி கிராமம் ஆகும். என்னுடன் பிறந்தவர்கள் 1.மூத்தவர் பெயர் கணேசன், 2.வது நான், 3.என் தம்பி கங்கன் இறந்துவிட்டார், 4.என் தங்கை இறந்துவிட்டார். பிரமான வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம என்னுடையதுதான் அதில் நான்காவது பத்தியில் என் தாயார் 2004ம் வருடம் இறந்துவிட்டார் என்று தவறாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 01.09.1972ல் என் தம்பியும், என் தங்கையும் இறந்துவிட்டதாக சாட்சியம் அளிக்கின்றேன் அவ்வாறு இருக்கும்போது முதல் விசாரணை வாக்குமூலத்தில் 6ம் பத்தியில் 01.09.1972ல் என் தம்பியும், என் தங்கையும் சேர்ந்து என் தகப்பனார் திரு.சண்முகம் அவர்களுக்கு விடுதலை பத்திரம் அளித்துள்ளது தவறு என்று சொன்னால் 01.09.1972ல் என் தம்பியும், என் தங்கையும் இல்லை. உயிருடன் இல்லாத நபர்கள் விடுதலை பத்திரம் எழுதியிருப்பதாக பொய்யான சங்கதிகளை தாவாவில் நான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனக்கும் என் அண்ணனுக்கும் தாவா சொத்து அயிட்டம் நெ.1 முதல் 17 வரை சொத்தில் பாகம் கொடுக்க தயாராக இல்லை என்றால் சரிதான். எதிர்வழக்குரையை என் வழக்கறிஞர் தயார் செய்தார் என்றால் சரிதான். அதில் அயிட்டம் நெ.1 முதல் 17ல் சொத்தில் பங்கு கொடுக்க தயாராக இருக்கிறேன் என்று சொன்னால் அவ்வாறு நான் சொல்லவில்லை. எனக்கு எழுத படிக்க தெரியாததால் பூர்வீக சொத்தினுடைய சர்வே எண் எனக்கு தெரியாது. நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனு அனைத்திலும் நான் கைநாட்டு வைக்கவில்லை கையெழுத்துதான் போட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் படித்து பார்த்துதான் கையெழுத்து போட்டேன் என்றால் நான் கையெழுத்து போட்டேன் ஆனால் நான் படித்து பார்க்கவில்லை. அயிட்டம் நெ.7 மற்றும் 18 புஞ்சை சர்வே எண் 697/5ல் கிணறு உள்ளது என்றால் சரிதான். நான் 15 வயதிலிருந்து வேறுஒரு நிலத்தில் விவசாயம் செய்துவந்தேன் என்றால் சரிதான்.

(வாதி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)